www.Padasalai.Net

9 - ஆம் வகுப்பு இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 202.

காலம் : 1.30 மணி **N** தமிழ் மதிப்பெண்கள் : 50

## பகுதி- 1

I சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 6 X 1 = 6

1. பாரதிதாசன் இயற்பெயர்
அ) பாரதி ஆ) கனகசுப்புரத்தினம் இ) நாமக்கல் கவிஞர் ஈ) திருஞானம்

2. மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறி.

| அ) | ஆ) | இ) | ஈ) |
|---|---|---|---|
| கலைக்கூடம் | கடி | வினவினான் | இன் |
| திரையரங்கம் | உறு | செப்பினான் | கூட |
| ஆடுகளம் | கூர் | உரைத்தான் | சிறு |
| அருங்காட்சியகம் | கழி | பகன்றான் | அம்பு |

3. சிறுபஞ்ச மூலத்தில் ஒவ்வொரு பாடலிலும் வெளிப்படும் கருத்துக்களின் எண்ணிக்கை
அ) 7 ஆ) 6 இ) 8 ஈ) 5

4. 'பொதுவர்கள் பொலிஉறப் போர் அடித்திடும்' - நிலப்பகுதி ......... .
அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

5. ஐந்து சால்புகளில் இரண்டு
அ) வானமும நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்
இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

6. பூவாது காய்க்கும், <u>மலர்க்கை</u> - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?
அ) பெயரெச்சம், உவமைத்தொகை இ) எதிர்மறை பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை
ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

## பகுதி - 2 (மதிப்பெண்கள் - 12) பிரிவு - 1

**குறுகிய விடை தருக. (மூன்று மட்டும்). விடைக்கேற்ற வினா அமைக்க.**

7. நடுகல் என்றால் என்ன? 3 X 2 = 6
8. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
9. நீங்கள் விரும்பி படித்த நூல்கள் யாவை?
10. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?

### பிரிவு - 2

**விடை தருக. (மூன்று மட்டும்).** 3 X 2 = 6

11. ***மரபுத் தொடர்களை நீக்கி எழுதுக.*** உடும்புப்பிடி, மேளதாளத்துடன்
12. **மரபுப்பிழைகளை நீக்கி எழுதுக.** அ) கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டாள்.
ஆ) கொடியில் உள்ள மலரை எடுத்து வா.
13. கைபிடி - கைப்பிடி - சொற்களின் பொருள் வேறுபாடுகளையும், அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.
14. ***பிழைநீக்கி எழுதுக.***
அ) நல்ல தமிழுக்கு எழுதுவோம். ஆ) குழலியும் பாடத் தெரியும்.



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net

பகுதி - 3 மதிப்பெண்கள் - 9

15. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக. 3 X 3 = 9

16. இராவண காவியத்தில் இடம் பெற்றுள்ள இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

17. குறிஞ்சி நிலம் மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

18. 'பூவாது' எனத் தொடங்கும் சிறுபஞ்சமூலப் பாடலை எழுதுக.

பகுதி - 4 (மதிப்பெண்கள் - 15) 3 x 5 = 15

19. உங்கள் பள்ளி நூலகத்திற்கு தமிழ் - தமிழ் - ஆங்கிலம், என்னும் கையடக்க அகராதி பத்து படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

20. காட்சியைக் கண்டு கவினுற எழுது.



21. பா நயம் பாராட்டுக.

வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்
வளைந்துசெல் கால்களால் ஆறே!
அயலுள ஓடைத் தாமரை கொட்டி
ஆம்பலின் இதழ்களை விரித்தாய்
கயலிடைச் செங்கண் கருவரால் வாளை
கரைவளர் தென்னையில் பாயப்
பெயரிடைப் பட்ட வானெனத் தோன்றும்
பெருங்குளம் நிறைந்து விட்டாயே!

22. பத்தியைப் படித்து விடையளிக்கவும்.

சிறுகதை என்றால் சிறிய கதை, கொஞ்சப் பக்கங்களில் முடிந்து விடுவது என்பதல்ல. ஒரு சிறு சம்பவம், ஒரு மனோநிலை ஆகியவற்றை மையமாக வைத்து எழுதப்படுவது. சிறுகதையில் சம்பவமோ, நிகழ்ச்சியோ அல்லது எடுத்தாளப்படும் வேறு எதுவோ அது ஒன்றாக இருக்க வேண்டும்.

சிறுகதைப் பின்னலில் ஆரம்பம், மத்திய சம்பவம், அதன் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி என்ற மூன்று பகுதிகள் உண்டு. சாதாரணமான கதைகளில் இம்மூன்றும் படிப்படியாக வளர்ந்து கொண்டே போகும். சமீபத்தில் எழுதப்பட்ட அமெரிக்க சிறுகதைகளில் பழைய சம்பிரதாயங்கள் ஆரம்பம், முடிவு என்ற இரண்டு பகுதிகளும் கிடையவே கிடையாது. கதை திடீரென்று மத்திய பகுதியில் ஆரம்பிக்கிறது. அதிலேயே முடிவடைகிறது. இன்னும் வேறு ஒரு விதமான கதைகளும் உண்டு. அவற்றில் முடிவு என்ற ஒன்று கிடையாது. அதாவது கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டுகோல்.

அ. சிறுகதை என்பது எது? ஆ. சிறுகதை எதனை மையமாக வைத்து எழுதப்படும்?
இ. சிறுகதை எத்தனைப் பகுதிகளை உடையது?
ஈ. சிறுகதை படிப்பதால் நமக்கு ஏற்படும் நன்மைகள் யாவை?

1 X 8 = 8

பகுதி - 5

23. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.
*(அல்லது)* நூலகம், நூல்கள் ஆகிய குறித்து அண்ணாவின் வானொலி உரையால் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?



Kindly send me your district Questions & Keys to email id - padasalai.net@gmail.com